உ

வேலுமயிலுந்துணை



சுப்பிரமணியசுவாமி

# காவடிச்சிந்து

இஃது

சென்னிகுளம்

ஸ்ரீமத் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள்

இயற்றியது.

இஃது

கட்டுக்குடிப்பட்டு

ராம. சொக்கலிங்கம்பிள்ளையால்

கோலாலம்பூர்

கம்மர்சியல் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1924-(ஸ) இதன் விலை காசு (25)

T14202

R005C07

உ

வேலுமயிலுந் துணை



சுப்பிரமணியசுவாமி

# காவடிச்சிந்து

இஃது

சென்னிகுளம்

## ஸ்ரீமத் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள்

இயற்றியது


இஃது

கட்டுக்குடிப்பட்டு

ராம. சொக்கலிங்கம்பிள்ளையால்

கோலாலம்பூர்

கம்மர்சியல் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1924-ஆம் இதன் விலை காசு (25)

உ

கடவுள் துணை

# முகவுரை

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு காவடி யெடுக்கும்படி பிரார்த்தனை செய்து கொண்டவர் அதை நிறைவேற்றுந் தினத்துக் காவடியை வாகு மீதேற்றி குகப் பெருமானைப் பன் முறையினும் பலவழியினுந் துதி செய்து செல்வர் காதலன் காதலி முறையாக வழிபடுவோன் அன்பு மிகுதியினால் கடவுளை நாயகனாகப் பாவித்து நாயகனுடன் சேர்ந்தும் பிரிந்தும் ஊடியும் நிற்பதனால் நாயகிக்குண் டாகும் இன்பதுன்பங்களை யெடுத்தியம்புவதுபோல் அகப்பொருட்டுறையினும் இதனுட் சிலபாக்கள் பாடப்பட்டுள்ளன இந் நூலைப் படிப்பவர்களும் பாடக்கே ட்பவர்களும் ஒருங்கே ஆனந்த மடைவார்களென்பதோடு கருத்தையு முணர் வார்களாயின் பேரானந்தமடைவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை இத்த கைய காவடிச்சிந்துகளின் மீது மக்களுக்கிருக்கும் ஆர்வம் தென்னாட்டின் கண் பெரிதும் விளங்கும் முருகபிரானுக்கு காவடி செலுத்தா நின்ற பழனி திருச் செந்தூர் திருப்பரங்குன்றம், கழுகுமலை, திருத்தணிகை, குன்றக்குடி, எட்டி குடி முதலிய தலங்களில் காவடிச்சிந்தின் பெருமை அதிகமாய்த் தெரியவரும்.


இக்காவடிச்சிந்தை யியற்றிய அரும் பெரும் புலவராகிய ஸ்ரீ மத் அண்ணா மலை ரெட்டியார் வரதுங்கராம பாண்டியனால் வெண்பா கலித்துறை விருத் தம் என்னும் பாவாலும் பாவினங்களாலும் பாடப்பெற்ற அந்தாதித் தொடை பூண்ட முக்களாலிங்கர் வீற்றிருக்கும் திருக்கருவைப்பதிக்கணித்தாய் சென்னி குளம் என்னுமூரிற் பிறந்தவர் திருநெல்வேலி ஜில்லா சேற்றூர் சமஸ்தான வித்துவான் மகா-௱-௱-ஸ்ரீ இராமசாமிக்கவிராயரவர்களிடங் கல்விகற்று அதில் மிகத்தேர்ச்சி யடைந்த பிறகு ஊற்றுமலை சமீன்தார் சமஸ்தானத்து வித்துவா னாக விளங்கியவர், தென்னாட்டிலிவரைக்கொண்டாடாத வித்துவான்களும் கனவான்களும் ஜமீன்தார்களுமில்லை இவரது அரும் பெரும் புலமை ஊற்று மலைத்தனிப்பாடற்றிரட்டு என்னும் நூலில் பரக்கக்காணலாம்.

இந் நூலாசிரியர் முப்பதாம் ஆண்டிற்கு முன்னரே (1891-ம்) வருடம் இவர் காலஞ்சென்றனர் இவர் இளம் வயதிலேயே காலஞ்சென்று விட்டது. தமிழ்ச்செல்வியின் தவக்குறைவே இவர் பாடிய பாக்களைத் தொட்டாலுங் கை மணக்குஞ் சொன்னாலும் வாய் மணக்கும் என்பதற்கோரிலக்கியமாகும்.

இனி இவ்வருமைக்காவடிச்சிந்தை பலர் சில பாக்களை மாறுபட அச்சிட் டிருக்கின்றமையால் அவைகளை பல பிரதிகளைக்கொண்டு சிற்றறிவிற் கெட்டி யவரையில் திருத்தி அச்சிடப்பட்டிருப்பதால் அன்பர்கள் வாங்கிப்படித்து ஆனந்தமடைவார்களென்பது திண்ணம்.

உ

வேலுமயிலுந்துணை



சுப்பிரமணியசுவாமி

# காவடிச்சிந்து.

---

## விநாயகர்துதி,

திருவுற்றிலகுகங்க-வரையிற் புகழ் மிகுந்து
திகழத் தினமுறைந்த வாசனை மிகு
மகிமைச் சுகிர்த தொண்டர் நேசனைப் பல

தீயபாதக காரராகிய சூரர்யாவரு மாளவே செய்து
சிகரக்கிரிபிளந்த வேலனை யுமை
தகரக்குழல் கொள்வஞ்சி பாலனை

மருவுற்றிணர்விரிந்து மதுபக்குல முழங்க
மது மொய்த்திழிகடம்ப வாரனை விக
சித்சித்ர சிகியுந்து வீரனை யெழில்

மாகநாககு மாரியாகிய-மாதினேடுகி-ராசநாயகி
மருவப்புளகரும்பு தோளனை யெனை
யருமைப் பணிகொளுந்த யாளனை

தெரிதற் கரியமந்தி ரமதைத் தனது தந்தை
    செவியுட் புகமொழிந்த  வாயனை  யிள
    ரவியிற் கதிர் சிறந்த  காயனை  யகன்
  றேவ நாடுகெடாது நீடிய சேனை காவல னுகவே வரு
    திறலுற்ற சிவகந்த  நாதனை  விரி
    மரை யொத் தொளிருகின்ற  பாதனை

மருளற் றிட வினைந்து மனதிற் களிசிறந்து
    மதுரக்கனிவு வந்து  கூடவே  பல
    விதமுற்றிலகு சிந்து  பாடவே  விரி
  வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல
    வதனப் பரனிரண்டு  தாளையே  நய
    முதவப் பணிவமிந்த  வேளையே  (க)

---

## முருகக்கடவுள் துதி

### வேறு

சீர் வளர் பசுந்தோகை  மயிலான்  வள்ளி
    செவ்வித பூவா தினிய தெள்ளமுது மயிலான்
போர் வளர் தடங்கையுறு  மயிலான்  விமல
    பொன்னடியை யின்னலற வுன்னுதல் செய்வாமே

குஞ்சர வணங்காவல்  வீடா  தபடி
    கொஞ்சிமரு வுஞ்சரச ரஞ்சிதவி  சேடா
பைஞ்சர வணங்காவல்  வீடா  வளரும்
    பாலனென மாலையொடு காலை வினைவாமே.

வல்லவுணர் வழியாதும்  விட்டு  வெருள
    வன்சமர்செய் கந்தனிடம் வழியடிமை பட்டு
நல்ல வுணர் வழியாது  மட்டு  மிஞ்சு
    ஞான பரமானந்த மோனமடை  வாமே

ஒருதந்த மாதங்க  முகத்தான்  மகிழ
    வுத்தம கனிட்டனென வுற்றிடு  மகத்தான்
வருதந்த மாதங்க  முகத்தான்  எவரும்
    வாழ்த்துருக நாயகனை யேத்துதல் செய் வாமே  (உ)

---

# காவடிச்சிந்து

## கழுகுமலை நகர் வளம்

### வேறு

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் துதி
செப்பணுமலைக்குமனு கூலன் வளர்
செழிய புகழ் விளைத்த கழுகுமலை வளத்தைத்
தேனே சொல்லுவேனே

வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டு கொடி யாடை யந்த
வெய்யவ னடத்திவரு துய்யவிர தப்பரியும்
விலகும்படி யிலகும்

வீதி தொறு மாதிமறை வேதம் சிவ
வேதியர்க ளோது சாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்

சீதளமு கிற்குவமை கூறும் கிறச்
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்ச்
சித்திர நிகர்த்த மின்னார் குத்துமுலைக் குங்குமச்செஞ்
சேறும் காத நாறும்

நித்த நித்த முங்கணவ ரோடுங் காம
லீலையிற்பி ணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழி யார் வெறுத்த கோலமணி மாலை ரத்நம்
நெருங்கும் எந்த மருங்கும்

கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி யெங்கும்
காட்டுவதா லீரிரண்டு கோட்டுமத யானையிற் பல்
களிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ் சேர் வித்வசனக் கூட்டம் கலை
முற்றிலுமு ணர்ந்திடு கொண் டாட்டம் நெஞ்சின்
முன்னுகின்ற போது தொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றமர ரூரும் அதி
விந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சு

மிந்தநக ரந்தனை யடைந்தவர்க்கதுவும் வெறுத்
திருக்கும் அருவருக்கும்

துள்ளி யெழு வெள்ளை யலை மடங்கும் படி
சுற்றிலும் வளைந்த வகழ்க் கிடங்கும் பல
சொன்னமலை போன்மதிலு மின்னவதி னலேபுகழ்
தோன்றும் லோக மூன்றும்

கள்ள விழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை யணைக்குமதி மோகன் வளர்
கழுகுமலை நகரில்வள முழுமையுமெ னுவிலடங்
காதே மடமாதே (௫)

---

## கோயில் வளம்

### வேறு

சென்னிகுள நகர் வாசன் தமிழ்த்
தேறும் அண்ணுமலை தாசன் செப்புஞ்
செக மெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில் வீரன்

வன்னமயின் முரு கேசன் குற
வள்ளி பதம் பணி நேசன் உரை
வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வள நான்மற
வாதே சொல்வன் மாதே

கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்
கோபுரத்துக் கப்பான் மேவி கண்கள்
கூசப்பிர காசத் தொளி மாசற்று விலாசத்தொடு
குலவும் புவி பலவும்

நூபுரத் துத் தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழை வாரிடு முழ வோசைகள் திசைமாசுண மிடியோவென
நோக்கும் படி தாக்கும்

சந்நிதியிற் றயல் தம்பம் விண்ணிற்
ருவி வருகின்ற கும்பம் எனுஞ்
சரராசியை வடிவார் பல கொடி சூடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்

உன்னதமாகிய விஞ்சி பொன்னாட்
டும்பர் நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெற்றலாலதில் அதி சீதள புயல் சாலவு
முறங்கும் மின்னிக் கறங்கும்

அருணகிரி நாவிற் பழக்கம் தரு
மந்தத் திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கண மொழி போதினி லமராபதி யிமையோர் செவி
யடைக்கும் அண்டம் உடைக்கும்

கருணை முருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பவரேவரும் இகமேகதி
காண்பார் இன்பம் பூண்பார் (௪)

---

## கழுகுமலை வளம்

### வேறு

பொன்னுலவு சென்னிகுள நன்னகரண் ணாமலைதன்
புந்தியின் மகிழ்ந்து நித்தம் நின்றவன் முந்தி
வெந்திற லரக்கர்களை வென்றவன் மயில்
போல வேனலின் மீதுலாவுகி ராதமாதுமு னேகியேயடி
பூவையே யுனது தஞ்ச மென்றவன் அவ
ளியுமா வினையுமென்று தின்றவன்

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுந் துன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே பணி
வேலவன்கிரு பாகரன் குகன் மேவிடுங்கழு காசலந்தனின்
மிஞ்சிய வளங்களை நா னுன்னியே சொல்ல
ரஞ்சிதமாக் கேளடிவிற் பன்னியே

மூசுவண்டு வாசமண்டு காவின் மொண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே மைய
லாகவே பெடையுடனே கூடுமே யலை
மோது வாரிதி நீரை வாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்று மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே

தேசு கொண்ட பாரதந்த வீரதும்பி ராசியண்டர்
தேவதாருவைக்கரத்தாற் பிடிக்குமே சுற்று
மேவிய கிளையை வளைத் தொடிக்குமே யொளிர்
சேயசந்திர ஞேடுருஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
தீங்கனி மதுரசத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின் றதனை யள்ளிக் குடிக்குமே

அந்தர முருவிவளர்ந் திந்திர னுலகுகடந்
தப்புறம் போய் விண்றசையுஞ் சந்தன மரந்
தப்பித மிலாது கையால் வந்தன மெங்க
ளாறுமாமுக நாதனுக்கிடு மாறுபோல விசாலமுற்ற கொம்
பத்தனையு வின்றுதலை சாய்க்குமே யண்டப்
பித்திகை தனிலுஞ் சென்று தேய்க்குமே

கந்தரந்தொ றுங்கிடந்து கந்தரம்ப யந்தொதுங்கக்
கர்ச்சனை புரியுந்திறற் சிங்கமே நெஞ்சி
லச்சமுற விண்ணுறைமா தங்கமே தடங்
காவிலேசில தாவிலேவளர் மாவிருனடு வேகிராதர்கள்
கார்முக மேயுங்கணை களேறுமே யதில்
வார்மது வால் வாரியுவர் மாறுமே

காலவடி வேனெடிய வாள் கொடிய நாகமுமிழ்
காரிபிணை வாரிகணை பானலே யன்ன
கூர்நயன வேடமின்னு ரேனலே காக்கும்
காலமேலெறி போதுவார்கவ ணேடு மாமணி தேசுவீசவே
கதிரவன் றனதுமுகஞ் சுழிக்குமே யவன்
குதிரையுங் கண்ணைச்சுருக்கி விழிக்குமே

ஓலமலி கோலநீல வேலைசூழு ஞாலமீதி
லுற்றவரின் பத்துடனே வானமே செல்ல
வைத்தபல சித்திரசோ பானமே யென்ன
வோங்கு கோங்ககி ஞங்கிலாங்கவி பாங்கு நீங்கரு வேங்கை பூங்கழை
யொன்றொடொன்று வம்பு கொண்டு நீளுமே கோள்கள்
சென்று சென்று நின்று நின்று மீளுமே (ரு)

---

## வாவி வளம்

வேறு

புள்ளிக்கலாபமயிற் பாகன் சத்தி
புதல்வனானகன யோகன் மலை
போலத்தான் றிரண்ட கோலப்பன்னிரண்டுவாகன் நல்விவேகன்

வள்ளிக்கிசைந்தமுரு கேசன் அண்ணு
மலைக்கவிராசன் மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலை வாவிவளஞ் சொல்லுவேன் மாதேகேளிப்போதே

வெள்ளை நாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டெழுந்துசின வாளை கதி
மீறிப்பாயுந் தோறுங் கீறிச்சாயுந் தென்னம்பாளையுடன்றுழை

தெள்ளும் பிள்ளையன்னப் பேடும் இளஞ்
சேவலானதுவு மூடும் பின்பு
தேமலர்த்தவிசிற் காம முற்ற வந்து கூடும் உறவாடும்

மின்னிக் குலவிமதி மானும் வரி
வெள்ளைப்பணிலராசி தானும் மட
மின்னார்விழிக ளென்ன மன்னு கெண்டை முத்தமீனு மடமானும்

வன்னத்தாமரையைக் கண்டு வாயின்
மதுர ராகம் பாடிக் கொண்டு மதி
மயங்கிப் பேட்டினுடன் முயங்கியே கிடக்கும் வண்டு கள்ளையுண்டு

அந்தரத்து மின்போற் கூடிக் கொங்கை
யாலே நீந்திவிளை யாடிச் செல்லு
மங்நலார் நடக்கும் நன்னடைக்குருகியன்னம் செல்லும் பின்னம்

மந்தமேதியுள்ளே யெட்டும் சினை
வராலுமேலெழுந்து முட்டும் போது
மடிசுரந்து கன்றுதனை நினைந்து கண்டமட்டும் பாலைக்கொட்டும் (சு)

---

## துதி

வேறு

மரகத விகசித வொளிதவ ழிருசிறை
மருவிய மயின்மிசை யனுதினமுறைதரு வாசன் பவ நாசன்

குரகத சுகமணி வளிரத நடவிய
குவலய சரதர னெனுமத னனுமகிழ் கோலன் பரை பாலன்

பரி புர வணிகல கலவென வொலிபுரி
பரிதியு தயமதி லவிழ்மரை மலர் ஙிகர் பாதன் குக நாதன்

திரிபுர மவையொரு நொடிதனி லெரிகொடு
சிதைவுற நகைபுரி சிவன்மன மகிழுப தேசன் முரு கேசன்

பதுமநீ தியினெடு பணிலநீ தியுமெழில்
பரவிய சுரபியு முறுசுர புரன்மகள் பாகன் கன யோகன்

சததள நளினத விசுமிசை வதியொரு
சதுமுக விதிசிறை யதிலுற ஙிறுவுவி சாகன் றட வாகன்

குரைதிரை வரை ஙிரை புரைதர வுலவிய
குரவையி னடுவுறை ஙிருத்ரை முடுகிய கோபன் கமழ் நீபன்

பரைசிவை பகவதி யுதவிய சரவண
பவனறு முககுகன் மிசைமது ரிதகவி பாடுஞ் சுக நாடும் (எ)

வேறு

பவணக்கிரியதனுட் டானே மன்னு வானே பல
பாழிலேயலை யாமலின்புற நாளுமேயருள் மேவுகண் கொடு
பாராய் இன்னல் தீராய்

அவுணப் பகையை முடித் தோனே புண்ய வானே கதி
யாருமேதரு வாருமிங்கிலை யாதலாலருள் வாயினம்புரி
யாதே பண்ணுஞ் சூதே

விரகப் பெருவிதனத் தாலே மண்ணின் மேலே மனம்
வீணிலேயுழ லாதுகந்தவி சாகனேபுரி நீயும் வஞ்ச மென்
மீதே யெண்ணிடாதே

நரகச் சமன்வருமப் போதே பின்னில் லாதே பல
காளுமேமற வாது ஙின்சிறு பாதமாகிய சீதபங்கயம்
நானே யுன்னி னேனே

ஙிமலப் பெருமிதச்செவ் வேளே கன்னல்வேளே தொடு
நீடுபாணம தான்மருண் டிடை வாடுமாதரி டங்கொடாவகை
நீயே பண்ணுவாயே

குமரிக் கதிகபரற் கானே நண்ணி னானே யிகழ்
கோதிலாதத போபலம் பெறு நீதர்பாலக லாதுறைந்தருள்
கோவே யென்னுள் வாவே

கடல் சுற்றிய வுலகப் பாலே மின்னல் போலே வரு
காயமாகிய தீயவன்பிணி மேவியேதவி யாமலன் பொடு
காவேயென்னையாவே

திடமுற்ற வனினுடைச் சேயே யென்னை நீயே திவ்ய
சேவையே செயு ஞானபண்டிதர் நாவினூடினி தாவிளைந்திடு
தேனே பொன்ன னானே (அ)

வேறு

செந்தின் மாநகர் வாழ் கந்த நாதனிரு
செய்யபாத கஞ்சமே நமக்
குய்யமேவு தஞ்சமே யின்று
செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீய பாதகவி ரோதமாய விட்டுத்
திரும்புவாயே நெஞ்சமே

பந்த பாச மிதையெந்த வேளையினும்
பார்க்கும்போது தொல்லையே யல்லா
லார்க்குமாவ தில்லையே யொரு
பார மேரு வில்லையே கையிற்
பற்று நாதன்மாது பெற்றநீதன்மீது
பனுவல் சூடு வல்லையே

மங்கை மார்களிரு கொங்கை துங்கமத
வாரணங்கொள் கும்பமே முகம்
பூரணசந்திர விம்பமே பட
மாசுணனி தம்பமே துடை
மாரவேளரசு மண்டபத்தருகில்
வைத்தரண்டு கம்பமே

செங்கை சூரியோத யங்குலாவ மலர்
சீதபத்ம தளமே வாயி
லோது சொற்கள் குளமே யிதழ்
திவ்ய பொற்ப வளமே யென்று
சிந்தித் தாற்குமரன் கந்தப்பாதமலர்
சேர்வதெவ்வா றுளமே

வன்னி மானவிழி மின்னவே கடையில்
வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்த வேளெனெஞ்சே கந்தவேளினை
மருவுறுது பங்கமே

சென்னி மாநகரண் ணுமலைக் கவிஞன்
தேசமெங்கு மிசையே பெறப்
பேசுசந்த மிசையே சற்றுந்
தீர்ந்திடாத நசையே வைத்துச்
சேவலாளிபத மாவ லோடுபணி
தினமுநூறு விசையே (௬)

---

## சுரம்போக்கு, நற்றாயிரங்கல்.

### வேறு

பாதிராத்திரி வேளையில்வீட்டுப்
பக்கத்தில்வந்து மேவிப் பஞ்ச
பாதகனொரு பாவி சிறு
பாவையையெல்லக் கூவிக் கையைப்
பற்றிக்கூட்டிக்கொண் டேகினன்பதை
பதைக்குதேயென்ற னுவி

சோதனைப்பிர காரமாயென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோஷம் எவர்
சூதினுல் வந்த மோசம் இனித்
தொலையுமோ பிள்ளைப் பாசம் இதைச்
சுற்றத்தா ரறிந் தாலெ னக்குமுன்
சொல்வரே பரி காசம்

தேனிலங்கிய காவனந்திகழ்
சென்னிமாநகர் வாசன் துதி
செய்யண்ணுமலை தாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் தினம்
சிந்தனை செயுந் தொண்டர் தீவினை
தீர்த்திடு முரு கேசன்

நானிலம்புகழ் கழுகுமாமலை
    நாயகன் பாண்டி    நாட்டில்    நெஞ்சில்
    நாணம்விட்டுத்தன்    பாட்டில்    வெப்பம்
    நண்ணியபாலைக்    காட்டில்    மகள்
    நடக்கவேண்டி முன்னடக்கமாத்தெய்வம்
    லபித்ததோ மண்டை    யோட்டில்

மையல்கொண்டொரு பையல்பின்செல
    வயதுமீறின    மாதோ    இந்த
    மார்க்கந்தோன்றின    தேதோ    சென்ம
    வாசனைப்பல    வீதோ    ஐயோ
    மாதம் பத்துஞ்சு மந்து பெற்றவென்
    வயிறுந்தா னெரி    யாதோ

செய்யபஞ்சணை யும்பொருது
    சிவந்துகொப்புள    மாகும்    நெரிஞ்
    சிப்பழமென்று    நோகும்    அவள்
    சீரடிகளும்    வேகும்    படி
    தீயுங்கானவிற் காயும்வேனிலாந்
    தீயிலெப்படிப்    போகும்

தேடினுங்கிடையாததாகிய
    திரவியக்கரு    கூலம்    போலே
    செனித்தபெண்ணுக்குச்    சீலம்    வேறே
    திரும்பினதென்ன    காலம்    கொங்கை
    தெருண்டிடா முன்னமருண்டிடற்கெவன்
    செய்தானோ விந்த்ர    சாலம்

காடுசேர் கையிற் கரடி வேங்கைகள்
    காட்டுமேயார    வாரம்    அதைக்
    காதிற்கேட்டுவி    சாரம்    வைத்துக்
    கலங்குவாளந்த    நேரம்    என்றன்
    காதலிதன்னை யாதரித்துயிர்
    காப்பதுவேலன்    பாரம்    (௰)

---

## தலைவியிரங்கல்.

வேறு

நேமமாய்ப்பணியண் ணுமலைக்குதவு    நீசனைக்
    கழுகுமலை    நாதனை    நெஞ்சில்
    நினைக்கநினைக்கமீறியெனைக்கொல்லுதேகாம வேதனை

கோமளக்கடலி லேமிருத்ததிரைக் கூட்டமே
மன்மதனும்போ ராட்டமே செய்து
கோபமேவிளைத்தாற்றீருமோவெனக்கு வாட்டமே

வெள்ளத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறு மீனமே
யினியுமுண்டோ மானமே கொங்கை
வீக்கங்கொண்டதனுலேற்குதில்லையன்ன பானமே

அள்ளற்கழிக்கரையுண்மெள்ளக்குலவிவரு மாமையே
கொடியகாமத் தீமையே • நாளு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே

பொங்குமதுமலர்க ளெங்கும்பரிமளிக்கும் புன்னையே
பெற்றுவளர்த்த வன்னையே யெந்தப்
போதும்வைதுவைதுமோதுகிருள்பாவி யென்னையே

தங்குசித்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றலுமொரு சிங்கமே போலத்
தாக்கவேமயங்கி யேக்கமாமெலிந்தே னங்கமே

மங்கைமார்களத ரங்கணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசக்கடம்பன்வரநேசத்துடன்சொல்லுமோபல்லியே

அங்கயத்தினிறை பங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே கட்டி
யணைத்தவேன்முருகன்றனைக்கண்காணேனையோ வின்னமே (௰க)

---

## தலைவியின் ஊடல்.

### வேறு

ஆறுமுகவடி வேலவனே கவி
யாணமுஞ்செய்ய வில்லை சற்று
மச்ச மில்லாமலே கைச்சரசத்துக்
கழைக்கிறு யென்ன தொல்லை

மீறிய காமமி லாதபெண் ணேடே
விளம்பாதே வீண் பேச்சு சும்மா
வெள்ளைத் தனமாகத் துள்ளுகிருய் நெஞ்சில்
வெட்கமெங்கே போச்சு

மேட்டிமையென்னிடங் காட்டுகிரு யினி
வேறில்லையோ சோலி இதை
வீட்டிலுள்ளார் கொஞ்சங் கேட்டுவிட்டாலது
மெத்த மெத்தக் கேலி

தாட்டிகஞ் சேர்கழு காசல மாநகர்
தங்குமுரு கோனே இந்த்ர
ஜாலத்தினுலென்னைக் காலைப்பிடித்தாலும்
சம்மதியே னேனே

அக்கரைக் காரர்க்குப் புத்திகொஞ்ச மென்பா
ராரும் பழ மொழியே நீயும்
அப்படி யென்னைப் பலாத்காரஞ் செய்திடி
லாச்சுது பெண் பழியே

சர்க்கரைக் கட்டிபோல் வள்ளிதெய் வானையாங்
தையலுனக் கிலையோ இரு
தையலரைச்சேரும் மையலுனக்கென்ன
தானுமொரு வீலையோ

அம்புவியிற்சிறு பெண்களின்மேலுனக்
காசையேன் காணுதையா நீர்
ஆக்கப்பொறுத்தாலு மாறப்பொருதவ
ராகவே தோணுதையா

நம்புமண்ணுமலை தாசன்பணியும்
நளினமலர்ப் பாதா கொஞ்ச
நாளைக்குமேலொரு வேளைக்குலீலை
நடத்தினலா காதா (கஉ)

---

## பாங்கி தலைவி நிலைமைகூறித்தலைவனை அழைத்தல்.

### வேறு

கண்ணுயிரம்படைத்த விண்ணுரிடந்தரித்த
கனவயிரப்படை யவன்மகளைப்புணர் கத்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதின முற்றிடு சுத்தனே

அண்ணா மலைக்கிடர்க ணண்ணா தொழித்துமிக
    வகமகி ழர்தன தருளைய ளித்திடு    மையனே    திசை
    யரவமும் வெட்குற மயிலைகடத்திய    துய்யனே

மின்னோ கமலமலர்ப் பொன்னோ வெனப்புகல
    விகசித ரத்தின நகைக டரித்தொளிர் மெய்யினாள்    கதிர்
    விரவிய சித்திர வளைய லடுக்கிய    கையினாள்

எந்நேர முமனதி லுன்மீதி லேமயல்கொண்
    டெழுதிய சித்திர மெனமவு னத்தினி லிருக்கிறாள்    வள்ளத்
    திடுகிற புத்தமு தினையும்வெ றுத்தரு வருக்கிறாள்

கும்பத் தினைச்சினந்து வம்பைப் பிதிர்த்தெழுந்து
    கொடியிடைமுற்றிலுமொடியவளைத்தது    கொங்கையே    மணங்
    குழல்க டப்பினில் நினைவது வைத்தனள் மங்கையே

செம்பொற் சிலம்புகள் புலம்பப் பெருந்தெருவிற்
    றிகழ்தருசிற்றில்கள்புரிவகைவிட்டவள் தியங்கினாள்    உன்றன்
    றிருவழ கைக்கரு விழியு ளிருத்தியே    மயங்கினாள்

போராடு தற்குரிய கூரார் மலர்க்கணையெய்
    புகழ்பெறு சித்தச தனுவத னைப்பொரு    புருவத்தாள்    தவம்
    புரிபவ ரைத்தன தடியில் விழப்புரி    பருவத்தாள்

சீராக மெத்தைதனில் நேராக வைத்துனது
    திருவத ரக்கனி யிதழை யருத்தியே சேரையா    யிங்கத்
    தெரிவை யுளத்துனை யலதுபி டித்தவராரையா.    (கரு)

---

## தலைவி பாங்கியைத் தூதுவிடுதல்.

### வேறு

பூமிமெச்சிடுமண் ணாமலைக்கோர் துணை    யானவன்
    மயில் வானவன் ஒரு    கானவன்    ஏனப்
    புனத்தைக் காக்கும்வள்ளி
    தனத்தைப் பார்க்கமெல்லப்    போனவன்
சேமமுற்றகழு காசலேசனையே    தேடுதே
    மனம் வாடுதே கால் தள்    ளாடுதே    யிரு
    செங்கைதங்கிநின்ற சங்கினங்கள்கழன்    றோடுதே

தென்றலானபுலி வந்துகோபமொடு சீறுதே
தடு மாறுதே யித ழூறுதே மெத்தத்
தீமையாமிருளிற் காமலாகிரியு மீறுதே

குன்றமானமுலை ரண்டுமார்பில்விம்மிக் கொண்டுதே
தேமன் மண்டுதே வெப்புக் கண்டுதே மலர்க்
கொம்புபோலமென்ம ருங்குலானதுந்து வண்டுதே

உள்ளமெல்லமெல்ல லீலைசெய்யவினை ந் துருகுதே
முத்தங் கருகுதே கண்ணீர் பெருகுதே என்ற
னுச்சிக்கேறிக்காமப்பித்தங்கிறுகிறென் றுருக்குதே

வள்ளமேவுபசும் பாலுந்தேனுமரு வருக்குதே
கசந் திருக்குதே துன்பம் பெருக்குதே வண்ண
வாருந்தா றுமாறுக் கிறவேதனமும் பருக்குதே

பாரமானகொங்கை யோரம்வேடனம்பு பாயுதே
யுடல் தேயுதே மலர் தீயுதே கொடும்
பாவியானமதி யாவிசோரவந்து காயுதே

மாரவேளினுலே கோரமானகாம வாதையே
யெனுந் தீதையே தீரத் தூதையே சொல்லி
வாட்டந்தீர்குகனைக் கூட்டிவாடியடி கோதையே. (கச)

---

## பாங்கி தலைவியின் அவயவத்தருமை சாற்றல்.

### வேறு

சந்தவரைவந்தகுக நாதா பரை
யந்தரிமனோன்மணியா மாதா தந்த
சண்முக சடாட்சரவி நோதா
குழைக் காதா சூரர் வாதா வன
சஞ்சரிவெண் குஞ்சரிச மேதா

செந்தமிழன் ஞமலையை யாளாக் கொண்ட
கந்தவர விந்தமலர்த் தாளா கட்கன்
சிந்திடுக டம்பணியுந் தோளா
நெடுநாளா மறவாளா வுனைத்
தேடோர்குயிற் பேடுருவங் கேளாய்

| | | |
|---|---|---|
| சுந்தரமிகுந்தகுழன் | மேகம் | அவள் |
| சொந்தநுத லிந்துவிலோர் | பாகம் | திருந் |
| தும்புருவம்வில்லொடுசி | னேகம் | |
| தவயோகம் வென்ற | னேகம் | வஞ்சந் |
| துஞ்சுவிழி நஞ்சினிலும் | வேகம் | |
| சந்தமலிகின்றமுக | மிந்து | வள்ளைத் |
| தண்டுசெவியென்பதுவே | தந்து | கன்னம் |
| சாணை நுனிநாசியின்ப | சுந்து | |
| மதுச்சிந்துதல்பொ | ருந்து | சிறு |
| சண்பகந்துப்பா மிதழ்சி | வந்து | |
| செங்குமுத புட்பமதை | யொத்து | மொழித் |
| தேனுதவும் வாய்நகையோ | முத்து | கண்டஞ் |
| சீதரனூ ரூதுவர | நத்து | |
| சொற்றித்தித்துப் பாகைக் | கைத்து | விடச் |
| செய்யுமென வுன்னலா | முளத்து | |
| குங்குமவா கங்கசகோ | தண்டம் | முன்கைக் |
| கோமகரயாழுவமை | விண்டம் | கையைக் |
| கோகநத மோவெனம | ருண்டம் | |
| ஆழிமண்டங்குவி | கண்டம் | நெருங் |
| குங்கெளிறு சிறுகிளித் | துண்டம் | |
| கட்டுகதிர்பட்டுமணி | வம்பு | கிழி |
| பட்டுவழிவிட்டிடவெ | ழும்பு | கிற |
| கட்டழகாம் வட்டமுலை | செம்பு | |
| யானைக்கொம்பு சிவ | சம்பு | குடங் |
| கைக்கும்வளையாதபொற்ப | றம்பு | |
| மட்டுமிழ்பசுந்துளப | மாலே | செங்கண் |
| வளருகிற தவிசெனுமோ | ராலே | சிறு |
| வயிறுமயிர் சிற்றெறும்பு | போலே | |
| விரைவாலே வெள்ள | மேலே | சுற்றி |
| வந்தசுழியுந்தியிடை | நூலே | |
| தரமரவபடமெனல்கு | லுண்டு | துடை |
| தங்கவிறச் செங்கதலித் | தண்டு | முழந் |
| தாட்குவமை கேட்கிலவை | நண்டு | |
| சினைகொண்டுவளர் | பெண்டு | வரால் |
| தானேகணைக் காலெனுமி | ரண்டு | |

பரடு தராசுயர்குதிகந் துகமே யணி
பரவு புறவடியிணைபுத் தகமே கடற்
பவளமதி தசவிரல்கள் நகமே
யம்போ ருகமே பத யுகமே மயில்
பண்ணுமிளஞ்சாயலையா சகமே

மேனகையோ டுருவசியிந் த்ராணி செல்வ
மிக்கதிரு முக்யகலை வாணி இந்த
மின்னரசி தன்னுருவங் காணி
னெஞ்சுநாணி மலர்ப் பாணி தலை
மீதுகுவித்துத் தொழுவார் பேணி

சேனையொடு வந்துகருங் காவி யம்பைச்
செய்ய கருப்புச்சிலைவைத் தேவி சண்டை
செய்யுமொருமன்மதனும் பாவி
எங்கடேவியுட லாவி தனைத்
தீர்க்குமுனங் காத்திடுவாய் மேவி (௧௫)

---

## தலைவன் வருத்தஞ்சாற்றல்

### வேறு

வன்னத்தினைமாவைத் தெள்ளியே யுண்ணும்
வாழ்க்கைக்குறக்குல வள்ளியே யுயிர்
வாங்கப்பிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவை நிகராகிய புயமீதணி பலமாமணி
மாலை படீரெனத் துள்ளியே விழத்
வான்மதுவீசுந்தீ யள்ளியே

கன்னத்தினிற் குயிற் சத்தமே கேட்கக்
கன்றதுபா ரென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யு தேகாமப் பித்தமே யுடல்
கனலேறிய மெழுகாயின தினியாகிலு மடிபாதகி
கட்டியணைத்தொரு முத்தமே தந்தாற்
கைதொழுவேனுன்னை நித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோவுன் நெஞ்சமோ கொண்ட
மையற்பயித்தியங் கொஞ்சமோ சிலை
மதனுகம முதுகாவிய மதிலே மொழி சுகலீலையின்
மார்க்கமுனக் கென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தை யுரைக்கவும் பஞ்சமோ

தேடக்கிடையாத சொன்னமே யுயிர்ச்
சித்திரமேமட வன்னமே யரோ
சிக்குது பால்தயி ரன்னமே பொரு
சிலை வேள் கணை கொலை வேலென வீரிமார்பினி னடுவேதொளை
செய்வது கண்டிலை யின்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே (௰சு)

---

## தலைவனைக் கலந்தமை தலைவி பாங்கிக்குக்கூறல்

வேறு

செந்தின் மா நக ரந்தனில் மேவிய
தேசிக னுமுரு கேசன் மயில்
வாசியி லேறுமுல் லாசன் சிறு
திங்களும் பண சங்கமாசுண முந்துலங்கிய கங்கையாறொடு
செஞ்சடாடவி மீதணி வார்செவி
சேர முன்னோனுப தேசன் அடி
யார்தமை யாள் விசு வாசன்

எந்த நேரமும் வந்தனை செய்திடி
யெண்ணும் அண்ணாமலை தாசன் றுதி
பண்ணு மெய்ஞ் ஞானவி லாசன் என்னோ
டிங்கெழுந்து தயங்குமாலையில் வந்து வண்டுமு ழங்குசோலையி
லின்பசாகர மாகிய லீலைக
ளன்புடனே செய்தான் மானே அந்தச்
சம்ப்ரமமென்ன சொல் வேனே

மங்கைமார் பலரும் புடைசூழ்தர
மாமலர் கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தேதனி நின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்ற வானன மைந்தொ டொன்று மிகுந்து வார்மது
வண்டலோடு கடம்பெனு மாரமும்
வாரமுந் தோன்றிடச் சேர்ந்தான் என
தேரும்பார்த்தேகளி கூர்ந்தான்

பங்கயாசனமேலுறை நான்முகப்
பாதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியை யெப்படிச் செய்தான் அடி

### வேறு

பஞ்சரஞ்சினு மஞ்சு சீரடி கொஞ்சுரஞ்சித வஞ்சியே புவி
பட்டு நீக்லை விற்கவொண்ணுதென்று
பன்மலர் மெத்தை யொன் றிட்டான் பின்பு
மென்மெலவந்தென்கை தொட்டான்
(டுஎ)

---

## துதி.

கன்னல்சூழ்பழ னம்புடை சூழ்கழு
காசலந்தனில் வாழ்பிர தாபனே ஊன
வாசமெங்குங் கமழ்கின்ற நீபனே வளர்
காதலோடிருபோதிலும் பலபோதினுற் பணிவார்மனத்துறை
காரிருட்குவை நீக்கிய தீபனே அதி
சூரபத்மனைத்தாக்கிய கோபனே

சென்னிமாநகர் வாழுமண்ணமலை
செப்புஞ்செந்தமிழுக்கதி நேசனே சிவ
சுப்பிரமண்ய னெனும்பிர காசனே கொடுஞ்
சிந்தைதைநந்து புலம்பிவின்றிருமந்திரந் தனில் வந்தடைந்துனைச்
சேவிக்குங் குணமென்றெனக் காகுமோ மிகு
பாவிக்குந்துய ரெப்படிப் போகுமோ

வந்தவர்க்குப் பழம்புளிக் காடியே
தந்திடச்சகியார்தமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெத்தனை கோடியே குலை
வாழையின்பழ மோசனிந்திடு மாழையின்கனி யோவெனும்படி
மதுரிதம்பெற வேவிதம் பாடியே யொரு
விதப்பரிசும் பெறுதுளம் வாடியே

வெந்தரைக்குள் வெடிப்பிடைப்பாலையே
சிந்துபித்தரைப்போல் வெறும் வேலையே செய்யும்
வீணனென்விளங்குன்றண்டைக் காலையே யெந்த
வேளையுந்துதி கூறவுந்துயர் நீளுவெம்பவ மாறவும் புரி
வில்வவேணி சேர்கற்பக வாலையே தரு
செல்வனே யெனுங்கற்பகச் சோலையே (டுஅ)

## தலைவியின்ஊடல்.

### வேறு

செந்தூர்வளர்முருக நாதா அருணோதயச்
செந்தாமரைநிகரும் பாதா திகழ்
சிந்தையிலண்ணுமலைசெய் விந்தையையெண்ணுதருள்செய்
சித்திரவேற்கரவி நோதா வுனதுவஞ்சச்
செய்கையின்னமுந்தெரி யாதா

சந்தோடமாகவேபோய் வீடு வீடுகடோறுஞ்
சரசங்கொண்டாடுவதே பாடு வந்துன்
றன்னுடனே சேர்பிரியக்கன்னியர்கள்பேர்வரியச்
சகத்திரம் வேணுமேவெள்ளேடு தனித்தோரிடந்
தங்கியே மேயுமோ வெள்ளாடு

வேசையர்வாசலிலே சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல் வாங்கி மென்று தின்று
மெத்தப்பயித்தியங்கொண்டு சுற்றித்திரிந்தேமருண்டு
வீடுதேடிவந்தாயே யின்று தொடவேமாட்டேன்
வேணுமென் றாலும்போடு கொன்று

ஆசைகொண்ட வருக்கு ரோசம் கிடையாதென்பா
ரப்படிக்காகில்விசு வாசம் வைக்கும்
அந்த விலைப்பெண்டுகளைச் சொந்தமெனக் கொண்டனையே
யானாலு முனைப்போலே மோசம் போனவருண்டோ
ஆருஞ்செய்கிறுரேபரி காசம்

கந்தாசெய்யாதேபல வந்தம் புதுமலரைக்
கசக்கியறிவர்களோ கந்தம் சற்றுங்
காதலிலா மற்சினந்த மாதைவலியப்பிடித்துக்
கலந்தால் வருமோசுகா னந்தம் உனக்கெனக்குங்
கனவிலுமில்லையினித் தொந்தம்

எந்தப்பிறப்பினுமே வல்லி யுனையல்லாம
லெவ்வளையுஞ் சேரே னென்று சொல்லி யூரி
லெத்தனை பாத்தையையோ வீத்தமு மெனத்தனையோ
இப்படிக் காசி காஞ்சி டில்லி கன்யாகுமரி
யெங்கும்பார்த்தாலுமில்லை சல்லி

கங்குக ரையிலேயே சாடை சொல்லிவைபவர்
கட்டுகிருயே யெதற் காடை மானங்
காக்கவல்ல வாவென்பாலே சேர்க்கையிலா தேயன்பாலே
காத்தாயே வேசைமாதர் மேடை கைவசமாமோ
கலப்புல்லு த்தின்ருலுமே காடை

குங்குமஞ் சந்தனஞ் சவ் வாது சுகந்தப்பங்
குழுகுமென் றேபுயத்தின் மீது வாசங்
கொட்டுதெழி னெற்றி சந்தப் பொட்டொடு பகட்டுதிந்தக்
கோலம்புதிதாய் வந்த தேது நடந்ததெல்லாங்
கொஞ்சஞ் சொல்வாய் பண்ணுதே சூது (கக)

---

## தலைவி வருந்தல்

### வேறு

பாளைவாய் கமுகில் வந்தூர் வாளைபாய் வயல்சூழ் செந்தூர்
பாலனம் புரியவந்த புண்ணியா போகங்
காலையுஞ் செய்கிருய் முன்பி னெண்ணியா

வேளையோ விடிந்ததையா நாளைவாறே னின்று கையை
விட்டிடென்று லும்விடாமற் பிடிக்கிருய் பாலை
யொட்டவே மடியரிந்து குடிக்கிருய்

சித்தமுமண் ணுமலைசெய் குற்ற மெண்ணு வேலாகண்டோர்
சின்னிதழ்ப் பவளங்களில் வெள்ளையே தென்ரு
லென்னசொல்வே ளுனொருபெண் பிள்ளையே

மத்தகரி கர்தனத்தின் மெத்தநக ரேகை பட்டு
மாலைப்பிறை போலனந்தந் தோணுதே யிது
கேலித்துறை யாகுமென்று நாணுதே

உன்னையும் விவாகமில்லா வென்னையுமே யன்னை கண்டா
லொன்றுஞ்சொல்லி டாளோ அட பாவியே யின்று
தின்றிடுவே னென்பாள் பச்சை நாவியே

சன்னை சாடை யாகவந்தென் றன்னையணை வாய் நீயென்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லையே விட்டுக்
கூற்றுவன்போல் வந்தாயென்ன தொல்லையே

சாறு சேர் கரும்புருசி யாயிருந்தா லுட்வேரோடே
தான் பறித்துத் தின்னுவது ஞாயமோ முழு
ஆண்பிள்ளைக் கிதுதான் சம்பிர தாயமோ

நூறுதர மாறி மாறி வேறு வேறு லீலைசெய்தால்
நோகுமோநோ காதோவெனக் குள்ளமே கொண்டு
போகுமோ கிணற்று நீரை வெள்ளமே (உ0)

---

## நற்றுயிரங்கல்

### வேறு

என்னடி நான்பெற்றமங்கை யிருகொங்கை களிற் சங்கையெண்ண
வெத்தனை கோடியோ செங்கை விர
விடமேவளர் நகரேசைகள் மிகவேபடு வகைதோகையி
லேய்ந்த முருகவேள் கிள்ளி யுனைத்
தோய்ந்ததோ சொல்லடி கள்ளி

அன்னவயற்செந்தூர்வாசன் மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணாமலைக்கவி ராசன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தொடு கமழ் பொற்புய
அற்புதவேலன்செய் சாலம் தன்னாற்
கற்பழிந்தாயோவிக் காலம்

சித்தசன் கொக்கோகநூலை யந்திமாலை யொடுகாலை வைத்துச்
சிந்திப்பதாச்சுதுன் வேலை சிமிழ்ச்
சின்னத்தனமடவஞ்சியே யுன்னைப்பணி வொடுகெஞ்சியே
சேவற் கொடியோன்பூஞ் சோலை தனிற்
றேடிப்புரிந்தானோ லீலை

மெத்தப்பிரமை கொண்டேங்கிக் கொங்கைவீங்கி நேசப்பாங்கி மாரை
விட்டுத்தனியாக நீங்கி வடி
வேலுக்கதிபதிமையலை மேலிட்டலறியதையலே
வெட்கத்தைப்போக்கடித் தாயோ காம
வேசைத்தனம்படித் தாயோ

இன்னம்வி வாகமேயில்லை கமழ்கொல்லை வெடிமுல்லை குழ
லெங்குஞ்சிங்காரித்து வில்லை சந்த
மினிதாகிய களபந்தன கனமேருவி லணிகின்றனை
யிப்படியுந்தலை விதியோ பெண்ணே
யெப்படி யேயிது மதியோ

சன்னதமாக் காமப்பேயே பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம் வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளியே கண்டோர்திரள் கொண்டேபழி விண்டார் நம
சாதிக்கெல்லாமொரு வடுவே வரத்
தான் பிறந்தாய்வந்து நடுவே

வண்ணம் பயிரவி தோடி ராகம்பாடியுறவாடிச் சப்ர
மஞ்சத்திலே சென்று கூடி யுன்றன்
வன்னப்படி கம்போலொளிர் கன்னத்தினி லுந்தேனிதழ்
வாயினுங் கொஞ்சம் பற் குறியோ வைத்தான்
வாலமகனுக்கும் வெறியோ

எண்ணங்குமர வேள்பாலே சென்றதாலே யினிமேலே வயி
றெப்படியாகிலுஞ் சூலே வரு
மென்றே யெனதுள மஞ்சுது நன்றேசொலி லென்வஞ்சக
மில்லைக்கிழவன் சொல் வீணைக் காரர்க்
கேற்கா தென்றுலுங்கண் ணே (உக)

---

## காலம் நீடத்தலைவி யிரங்கல்

### வேறு

மஞ்சு நிகர் குந்தளமின்னே சததளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமே யொளிர் சொன்னமே நடை
யன்னமேயிடை பின்னமே பெற
வந்ததனபார வஞ்சியே
யதிவிருப்பத்துடனுரைக்கும்
வார்த்தையைக் கேளாசை மிஞ்சியே

அஞ்சுவயதானபருவந் தனிலெனது சிறுமனைமுன்
அங்கசவேள்போலே யுருவம் பெற்றே
அன்று வந்து நயந்து மாலையில்
நெஞ்சழிந்து மயங்கவேபுணர்
ஆறுமுக வேல வனையே
நினைவு கொண்டே மதிமருண்டே
யாறுதில்லை யென்ன வினையே

சென்னிகுள மேவியவாசன் இனிய துதியனுதினமுஞ்
செய்திடும் அண்ணாமலை தாசன் பாடுஞ்
சிந்து மீதுமிகுந்தமோகமுறுஞ்சுசீலகு கன்சரோருக
திவ்விய முகங்க ளாறுமே
கண்களிற்கண்டாற் பெண்களுக்கெல்லாஞ்
செவ்விதழும் வாயு மூறுமே (௨௨)

காவடிச்சிந்து
முற்றிற்று.